இணைப்புப்பெற காலமாகும். இதையெல்லாம் பரிசீலனை செய்து விவசாயிகளுக்கு இன்னமும் எளிய முறையிலே மின்சாரம் வழங்குவதற்கு என்ன செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்றையதினம், வெளிநாட்டிலே இருக்கக்கூடிய டெக்னாலஜியை அடிப்படையாக வைத்து சூரிய வெப்பத்தினால் மின்சார பம்ப்செட்டுகளை இயக்குவதற்கு முடியுமா என்ற ஒரு முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அண்ணா மாவட்டத்திலே பரீட்சார்த்தமாக ஒரு திட்டம் 'சோலார் எனர்ஜி' மூலம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் 750 பம்ப்செட்டுகள் கடலோரப் பகுதியிலே அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி தந்திருக்கிறது. இந்த 'சோலார் எனர்ஜி' வெற்றிகரமாகிவிட்டால், அதற்குப் பிறகு தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்கு மின்சார வெட்டும் இருக்காது, பம்ப்செட் இல்லையே என்ற குறையும் இருக்காது. அதற்கு முயற்சிகளை இந்த அரசாங்கம் துரிதமாக எடுத்துக்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76 நாளை எடுக்கப்படும்.

வினா எண் 77 இறுதியாக எடுக்கப்படும்.

வினா எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

78—

குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுது பார்த்தல்

***திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான பி.எஸ். மூர்த்தி நகர், சத்தியமூர்த்தி நகர், வியாசர்பாடி ஆகிய இடங்களிலுள்ள பழுது அடைந்த கட்டிடங்களைப் பழுதுபார்க்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

1996 ஆகஸ்டு 5]

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பணிகள் தற்போது துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதியில் பி.எஸ். மூர்த்தி நகரில் 3 பிளாக்கும், சத்தியமூர்த்தி நகரில் 3 பிளாக்கும் இடிந்த நிலையில் உள்ளது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் அவற்றை முழுமையாக இடிப்பதற்கான அனுமதியை அரசிடம் கோரி, இதுவரையில் அந்தப் பணி தொடங்கப்படாமலேயே இருக்கிறது. பெரம்பூர் தொகுதியில் பல இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, இவ்வாண்டு குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக புதிய வீடுகள் கட்டும் பணி துவங்கப்படுமா, எத்தனை வீடுகள் கட்டப்படும், அதனுடைய மதிப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எஸ். மூர்த்தி நகர், அதேபோல வியாசர்பாடி, சத்தியமூர்த்தி நகர் ஆகிய இடங்களில் புதிய கட்டிடம் கட்டுவதற்காக, மோசமாக உள்ள 6 கட்டிடங்களையும் இடிக்க அரசு ஆணை கோரப்பட்டுள்ளது. அரசு ஆணை வந்தவுடன், புதிய வீடுகளைக் கட்டுவதற்கான பணிகள் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாணை என்றால் புரியவில்லையே. ஆணையை நீங்கள் தானே போடவேண்டும். ?

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: ஆணையை நாங்களேதான் போடவேண்டும். அரசாணை பெறப்பட்டு வந்தவுடன் ...

முற்பகல் 9-50

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை வெளியிடப்படுகிற தேதி வேறுபடுகிறது. அதனால் அரசு ஆணை வெளியிடப்பட்டவுடன் செய்யப்படும் என்பதை அவர் தெரிவித்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு ஆணை கோரப்பட்டிருக்கிறது என்றார். சரி. சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வியாசர்பாடியில் புதிய திரு.வி.க. நகரில் ரூ. 2 ½ கோடி செலவில் 198 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மின்சார வாரியத்திற்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலத்தை குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் கட்ட மின்சார வாரியத்திடம் கேட்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் ரூ. 7 கோடி செலவில் 720 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1970, 1971, 1972 ஆம் ஆண்டுகளில்தான் சென்னை நகரிலே குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி வீடுகள் கட்டினார்கள். 25 ஆண்டுகளினுடைய இடைவெளியில் அந்த அடுக்குமாடி வீடுகள் எல்லாம் மிக மோசமான ஒரு சூழ்நிலையில் காணப்படுகிறது. தோராயமாக 60,000-க்கும் அதிகமான குடியிருப்புகள் இருக்கும். நமது நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்கள். இந்தக் குடியிருப்புகளை எல்லாம் புதுப்பித்து அந்த ஒதுக்கீட்டாளர்களுக்கே அதாவது குறைந்த விலை நிர்ணயம் செய்து தவணை முறையில் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அது எப்போது நடைமுறைக்கு வரப்போகிறது? ஏனென்றால் ஒரு குடியிருப்பை உருவாக்குகின்றபோதே 20 ஆண்டுகள்தான் அதற்கு காலம் என்று அப்போதே நிர்ணயித்துள்ளார்கள். 20 ஆண்டுகள் அந்த குடியிருப்புகளிலே வசித்தவர்களுக்கு இலவசமாக அதை செப்பனிட்டு தரவேண்டும் என்று அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. ப. ரங்கநாதன் : தலைவர் அவர்களே, இலவசமாக அதைச் செப்பனிட்டுத் தருவதாக அறிவிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1996 ஆகஸ்டு 5]

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த குடியிருப்புகள் 51,898. தற்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 கோடி ரூபாய் முதல் கட்டமாக அந்த குடியிருப்புகளை பழுது பார்ப்பதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். முதல் கட்டமாக 3 மாதத்திற்குள் 20,000 வீடுகள் புதுப்பிக்கப்படும். அடுத்த கட்டமாக ஒரு வருடத்திற்குள் அனைத்து வீடுகளும் புதுப்பிக்கப்பட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல குறைந்த தவணையிலே அவர்களுக்குச் சொந்தமாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கை சிவம்.

திரு. செங்கை சிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடுக்குமாடி வீடுகள் குறிப்பாக மேற்சொன்ன மல்லிகைப் பூ காலனி, நேரு நகர், உதய சூரியன் நகர் இப்படி பல அடுக்குமாடிப் பகுதிகள் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. இவைகளில் கடந்த ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் 4 அலாட்மெண்ட் உத்தரவை வைத்துக்கொண்டு இன்னும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். என்னிடத்திலும் வருகிறார்கள். அமைச்சரிடத்திலும் முறையிடுகிறார்கள். அது முறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன். பெயர் மாற்றத்திலே பெரிய ஊழல் நடைபெற்றிருக்கிறது. ஒரு மாதத்திற்கு ஒரு முறை பெயர் மாற்றம் - ஒரே வீட்டிற்கு ஆண்டுக்கு 12 முறை பெயர் மாற்றம் - நடைபெற்று பல இலட்சக்கணக்கான, ஏன் இன்னும் கோடிக்கணக்கான ரூபாய்கள் இதிலே லஞ்சமாக பெறப்பட்டு இருக்கிறது. இதனாலே என்னுடைய தொகுதியிலே மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அதற்குரிய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் ஒதுக்கீடுகள் தவறான முறையில் நடந்துள்ளது உண்மை. ஒரு குடும்பத்திற்கு 3 அல்லது 4 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதை அரசு அறிய வந்தது. இதனால் இதை மறு ஆய்வு செய்யவும் மேலும் பெயர் மாற்றம் தற்போது செய்யக் கூடாது என்றும் நமது அரசினால் உத்திரவிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 79, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.